**லீப்ரே ஆஃபீஸ் இம்ப்ரெஸ்-க்கான வழிமுறை தாள்**

**ஸ்போகன் டுடோரியல் குழு**

**ஐஐடி பாம்பே**

## 1 ஆன்லைன் / ஆஃப்லைன் உள்ளடக்கம்

1. ஸ்போகன் டுடோரியல்களின் உள்ளடக்கத்தைப் பின்வரும் இணைப்பின் மூலம் பெறலாம்: http://spoken-tutorial.org/tutorial-search/
2. பின்வரும் இணைப்பில் இருந்து ஸ்போகன் டுடோரியல்களைத் தரவிறக்கி இணைய இணைப்பு இல்லாமலும் கற்கலாம்:
   http://spoken-tutorial.org/cdcontent/
3. இந்த இணைப்பில் இருந்து, நீங்கள் கற்க விரும்பும் மொழியில் FOSS பிரிவுகளை தரவிறக்கலாம்.
4. ஸ்போகன் டுடோரியல் உள்ளடக்கத்தை ஒரு zip file ஆக உங்கள் கணினியில் தரவிறக்கலாம்.
5. அந்த zip file ன் உள்ளடக்கத்தை extract செய்து அவற்றை அணுகவும்.

## 2 பயிற்சி செய்ய செயல்முறை

1. ஸ்போகன் டுடோரியல்கள் மற்றும் file கள் அடங்கிய ஒரு தொகுப்பு உங்களுக்கு கொடுக்கப்பட்டுள்ளது.
2. பொதுவாக ஒரு சமயத்தில் ஒரு டுடோரியலை பயிற்சி செய்யவும்.
3. ஒரு ஸ்போகன் டுடோரியலை கேட்டு வீடியோவில் காட்டப்பட்ட அனைத்து படிகளையும் செய்து பார்க்கவும்.
4. மேற்சொன்னவற்றை செய்ய உங்களுக்கு சிரமமாக இருந்தால், முழு டுடோரியலையும் ஒரு முறை கேட்டுவிட்டு இரண்டாம் முறை கேட்டுக்கொண்டே பயிற்சி செய்யவும்.

## 3 லீப்ரே ஆஃபீஸ் இம்ப்ரெஸ்

1. "Select FOSS" அல்லது "All FOSS Categories" ன் தலைகீழ் முக்கோணத்தை க்ளிக் செய்து "LibreOffice-Impress" ஐ தேர்ந்தெடுக்கவும்.
2. "Select Language" அல்லது "All Languages" ன் தலைகீழ் முக்கோணத்தை க்ளிக் செய்து எந்த மொழியில் நீங்கள் கற்க விரும்புகிறீர்களோ அந்த மொழியைத் தேர்ந்தெடுக்கவும் (English, Hindi, Marathi ...).
3. "Submit" பட்டன் மீது க்ளிக் செய்க.
4. நீங்கள் தேர்ந்தெடுத்தவற்றுக்கு ஏற்றவாறு டுடோரியல்களின் ஒரு பட்டியலைப் பெறுவீர்கள்.
5. காட்டப்பட்டுள்ள பட்டியலில் முதல் டுடோரியலுடன் ஆரம்பிக்கவும்.

## 4 முதல் டுடோரியல்: Introduction

1. "Introduction" என்ற தலைப்பிற்கு சென்று அதன் மீது க்ளிக் செய்க.
2. இந்த டுடோரியலைக் காண ப்ளேயரில் உள்ள Play ஐகான் மீது க்ளிக் செய்க.
3. ப்ளேயருக்கு கீழே Pre-requisite (முன் நிபந்தனை) தோன்றும் (இணையத்தளம் மூலம் கற்பவர்களுக்கு மட்டும்).
4. ப்ளேயருக்கு கீழே Outline, Assignments, Code Files மற்றும் Slides ஆகியவை உள்ளன.
5. டுடோரியலை பார்த்துக்கொண்டே நீங்கள் பயிற்சி செய்ய ஏதுவாக ப்ரௌசரின் அளவை சரிசெய்யவும்.

### 4.1 லினக்ஸ் இயங்குதளத்தில் பயிற்சி செய்வதற்கான வழிமுறைகள்

(a) லினக்ஸ் இயங்குதளத்தில் டுடோரியல் விளக்கப்பட்டுள்ளன.
(b) இதனால் டுடோரியலில் சொல்லியவற்றைப் பின்பற்ற லினக்ஸ் பயனர்களுக்கு சுலபமாக இருக்கும்.

#### 4.2 விண்டோஸ் இயங்குதளத்தில் பயிற்சி செய்வதற்கான வழிமுறைகள்

(a) உபுண்டு லினக்ஸ் இயங்குதளத்தில் லீப்ரே ஆஃபீஸ் தொகுப்பை எவ்வாறு திறக்க வேண்டும் என டுடோரியலில் நிமிடம் 1:44 முதல் 1:58 வரை காட்டப்படும் இந்த பகுதியைத் தவிர்க்கலாம்.
(b) விண்டோஸில் Start>> All programs>>LibreOffice Suite ல் க்ளிக் செய்ய வேண்டும்.

#### 4.3 பயிற்சி செய்வதற்கான வழிமுறைகள்

(a) உங்கள் "Name-RollNo-Component" ஆகியவற்றை கொண்ட ஒரு folder ஐ "Desktop"- ல் உருவாக்குக. (உ.தா "vin-04-impress").
(b) நீங்கள் சேமிக்கும் file களுக்கு தனித்தப் பெயரைக் கொடுக்கவும், இதனால் அதை அடுத்த முறை கண்டுபிடிக்க முடியும். (உ.தா "Practice-1-vin").
(c) உங்கள் folder யிலேயே அனைத்து வேலைகளையும் சேமிக்க வேண்டும்.
(d) உங்கள் file கள் வேறு ஒருவரால் மேலெழுதப்படாமல் இருக்க இது உறுதிபடுத்தும்.
(e) வேலையின் முடிவில் உங்கள் file களை சேமிப்பதை விட உடனுக்குடன் சேமிக்கவும்.

#### 4.4 பயிற்சிகளுக்கான (**Assignments**) பொதுவான வழிமுறைகள்

(a) டுடோரியலில் சொல்லியபடி கொடுக்கப்பட்ட அனைத்து பயிற்சிகளையும் முயற்சி செய்க உருவாக்குக.
(b) உங்கள் folder ல் வேலையைச் சேமிக்கவும்.

#### 4.5 **Code file** களை பயன்படுத்துவதற்கான பொதுவான வழிமுறைகள்

(a) உங்கள் folder ல் வேலையைச் சேமிக்கவும்வீடியோ ப்ளேயருக்கு கீழே உள்ள "Code files" இணைப்பை க்ளிக் செய்து உங்கள் folder ல் அதை சேமிக்கவும்.
(b) தரவிறக்கப்பட்ட zip file ஐ extract செய்க.
(c) அந்த குறிப்பிட்ட டுடோரியலில் பயன்படுத்தப்பட்ட அனைத்து code/source file களையும் காணலாம்.
(d) அந்த குறிப்பிட்ட டுடோரியலில் கொடுக்கப்பட்ட வழிமுறைகளின்படி இந்த file களை பயன்படுத்துக.

6. ஆங்காங்கே இடைநிறுத்தி முழு டுடோரியலையும் பயிற்சி செய்க.
7. டுடோரியல் முடிந்தவுடன், வலது பக்கம் அல்லது ப்ளேயருக்கு கீழே உள்ள பட்டியலில் இருந்து அடுத்த டுடோரியலை தேர்ந்தெடுக்கவும்.
8. இந்த தொடரில் உள்ள அனைத்து டுடோரியல்களையும் முடிக்கும் வரை மேலே உள்ள அனைத்து வழிமுறைகளையும் பின்பற்றவும்.